<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

O.S.NO. 92/2014

Deposition of Witness : PW-2

Name : கருணாகரன்

Father's Name /W/o : த/பெ. சோனாச்சலம்

Religion : இந்து

Caste : -

Calling : ஆவண எழுத்தர்

Address : அரக்கோணம் வட்டம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day 29.02.2024

குறுக்கு விசாரணை: ( பிரதிவாதிகள் 1 முதல் 7 தரப்பில்)

1. நான் எத்தனை வருடமாக எழுத்தராக வேலை செய்கிறேன் என்றால் 35 வருடமாக உள்ளேன். அரக்கோணத்தில் மட்டுமா என்றால் ஆம். என்ன வழக்கு தெரியுமா என்றால் தினதயாளன் வழக்கு போட்டுள்ளார் தெரியும். பரிகாரம் தெரியாது, எந்த வருடம் பொது அதிகார பத்திரம் எழுதப்பட்டது என்றால் 1995ல் எழுதினார்கள். வா.சா.ஆ.8 பொது அதிகார பத்திரம் நான் தான் எழுதினேன் என்றால் ஆம். இதற்கு முன்பு ஒரு பொது அதிகாரம் எழுதப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. யார் பவர் கொடுத்தது என்றால் பலராமன், ராஜம்மாள். முன்னதாக கொடுக்கப்பட்ட 1992 பொது அதிகார பத்திரம் ரத்து செய்யப்பட்டதா என்றால் அது எனக்கு தெரியாது. பொது அதிகாரம் வாங்கி சொத்தை விற்ற பிறகு அவருக்கு சொத்தில் அதிகாரம் உள்ளதா என்றால் அது எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றாலும் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை: (பிரதிவாதிகள் 9 முதல் 13 தரப்பில்)

1. வா.சா.ஆ.8 ல் வைத்துள்ள கைநாட்டு பதிவு அலுவலகத்தின் வெளியே வாங்கியது என்றால் ஆம். ஆவணத்தை முழுமையாக தயார் செய்து ஆவணத்தை யாரிடம் கொடுத்தேன் என்றால் முகவரிடம் கொடுத்தேன். அவர் தான் பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்தேன் என்றால் ஆம். வா.சா.ஆ.8 ல் உள்ள விவரங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியும். வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் இல்லை. நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் ஆம்.